# திருப்பள்ளயம்

திருப்பள்ளயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பள்ளயம்!

வே. சண்முகநாதன்

78

★

பண்டுதொட்டுப் பாண்டிருப்பு என்னும் கிராமத்தில் பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் உறைந்திருக்கின்றனர். பாண்டவர்களின் இருப்பிடமாக இருந்ததனுல் இவ்வூர் பாண்டிருப்பு என்னும் நாமத்தைப் பெற்ற தென்பர் இப்பழம் பெருமை மிக்க இக் கிராமம் மட்டுமாநகருக்குத் தெற்கே இருபத்தியைந்து மைல் தொலேவில் கல்முனே நகருக்கருகாமையில் அமைந்துள்ளது.

பாண்டிருப்பில் அமைந்துள்ள பாண்டவர்களின் கோயிலில் நடைபெறும் இத் தீப்பள்ளய நிகழ்ச்சியால் அகில இலங்கையிலும் இவ்வூரின் கீர்த்தி பரவியுள்ளது. இக் கோயிலில் நடைபெறும் திருவிழாவை மற்றைய கோயில்கள் போன்று தேர் தீர்த்தம் திருவிழாவென அழைப்பதில்லே. இது மட்டக்களப்புத் தமிழில் 'தீப்பள்ளயம்' என்றே அழைக்கப்படுகின்றது. பள்ளயம் என்ருல் பெருவேள்வி எனப் பொருள்படும். இத் திருவிழாவின் இறுதி நாளன்று திரௌபதி அம்மனுக்கு அளிக்கும் பெருந் தீ வேள்வியே 'தீப்பள்ளயம்' என்ற இப் பெயர் வரக் காரணமாயிற்று

இத் தீ வேள்வியினுலேயே இக் கோயிலின் கீர்த்தியும் பரவலாயிற்று அதை விட ஆதியில் இலங்கையில் திரௌபதி அம்மனுக்கென ஆலயம் முதன் முதலில் அமைந்தது பாண்டிருப்பிலே ஆகும். இதனேப் பட்டயங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடியும். அதன் பின்னரே இலங்கையில் பல பாகங்களிலும் திரௌபதியம்மனுக்கு ஆலயம் எடுத்தனர் என்று அறிய முடிகிறது.

## வரலாறு

இவ்வாலயம் ஆராச்சியாளர்களால் அணுகி ஆராயப்பட வேண்டிய பழமை வாய்ந்ததாகும். ஆனுல் மட்டக்களப்பின் சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பிடித்ததாக இக்கோயில் வரலாறு காணப்படுகின்றது. அதற்குக் காரணம் இக்கோயில் வரலாற்றில் இரண்டு அரசர்கள் சம்பந்தப்பட்டிருப்பதேயாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சந்ததியினர் இதனை விளக்கமாக அறியும் பொருட்டு இதனைச் சற்றுவிரிவாகவே பார்ப்போம். இவ்வாலய வரலாறு மிகத் தொன்மை வாய்ந்ததாலும் வாய்வழியே கூறப்பட்டு வந்ததாலும் இன்றைய இக்கோயில் நிர்வாகத்தினர் கூட இதனைச் சரிவர அறியாமல் இருக்கின்றனர். இதனை இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி வருங்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வண்ணம் இது ஆய்ந்து அறிய வேண்டியதாகும்.

மாருத சேனனுடைய புத்திரன் எதிர்மன்னசிங்கன் மட்டக்களப்புப் பகுதிக்கு சிற்றரசனாக இருந்த காலத்திலே சிதைவுற்ற சிவாலயங்களைச் செப்பனிட்டு ஆறுகாலம் பூசையும் புரிவித்துத் திக்கதிபதிகள் வைத்து அரசுபுரியுங் காலம் வட நாட்டுக் கொங்கு நகரில் இருந்தது தாதன் என்னும் சமயப் பெரியார் வைஷ்ணவ மதத்தைப் பரப்பும் நோக்கங் கொண்டு மகா பாரதத்தோடு பல இதிகாசங்களையும் எடுத்துக் கொண்டு காவி கமண்டல தாரியாய் வேடம் பூண்டு இலங்கை மட்டக்களப்புப் பகுதியை வந்து சேர்ந்தார்.

இப்பெரியார் அந்நாளில் நாகர்முனை என்று பெயர் பெற்ற திருக்கோயில் சந்நிதியைக் கண்டு தரிசித்து அங்கேயே தங்கியிருந்து மகாபாரத இதிகாசத்தை அங்கேயே போதித்தனன். இதை அறிந்த திக்கதிபரொருவர் எதிர்மன்னசிங்க நிருபனுக்கு அறிவித்தனர் எதிர்மன்னசிங்க நிருபன் திருக்கோயிலுக்குச் சென்று தாதனின் குலம், கோத்திரம், நாமம் சுயநாடு இவைகளை விசாரித்தான்.

தாதனும் அரசனை நோக்கி அரசே என் குலம் வசியன் என் நாமம் தாதன் எனது கோத்திரம் விஷ்னு என்து நாடு கோங்கு நகர் நான் பாண்டவர் குலத்துத் தருமாதியார்களுக்கு நாகர் குலத்துத் துரியோதனாதிகள் செய்த தீமைகளைக் காண்பிக்கும் படி வந்தேன் என்றான்.

எதிர்மன்னசிங்க மன்னனும் அதனை அறிய விரும்பினன் இது பற்றி விளக்கிக் கூறிய தாதன் மகாபாரதத்தில் சொன்ன படி பாண்டவர்கள் வனவாசம் செல்லுதல் பார்த்தன் சிவனிடத்தில் பாசுபதம் பெறுதல் துரியோதனாதியாரைக் கொன்றதும் அரவானைக் களப்பலி செய்ததும் பின்பு அக்கினி குளித்து மீண்டும் இந்திரபிரஸ்தம் அத்திபுரம் இவைகளை அரசு செய்ததுங் காண்பிக்க வேண்டும் அதற்குச் சமுத்திரக் கரை அருகும் ஆல விருட்சம் நிறையப் பெற்ற இட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் அதற்கு அப்பால் வனமும் இருக்கும் இடத்தில் தான் காண்பிக்க வேண்டும் என்று வேண்டினன்.

அரசனும் சம்மதமுற்று அனைவரும் கடலருகாய் வரும் போது இக் கிராமம் தாதன் வேண்டியபடி உரிய வசதிகளுடன் காணப்பட்டது. அந்த இடத்தில் பாண்டவருடைய உறுப்பை ஆறு பேருக்கு உண்டாக்கி அதனை நம்பும்படி தீ வளர்த்து அதிலிறங்கி மீண்டுகாட்டினன். அரசனும் மகிழ்ந்து ஆலயம் உண்டாக்கிப் ''பாண்டுறுப்பு'' எனும் நாமஞ்சுட்டி வங்கர் குலத்துத்திக்கதிபரே பரிபாலிக்கும்படி திட்டஞ் செய்து தன்னிருப்பிடம் சென்றனன்.

''பாண்டுறுப்பு'' என்னும் நாமம் நாளடைவில் திரிந்து இப்போது ''பாண்டிருப்பு'' என வழங்குதலைக் காணலாம்.

இதுவே இக்கோயில் அமைந்த வரலாறெனலாம். ஆனல் இது எக்காலம் ஆரம்பிக்கப் பட்டது; என்பது அறிய வேண்டியதே! இதற்கு மூடுமந்திரமாகப் போற்றப்படும் கல்வெட்டினைப் பார்ப்போம்.

# தாதன் கல்வெட்டு

ஆரம்பத்தில் தாதனல் ஆரம்பிக்கப்பட்ட இக் கோயில் 'தாதன் கோயில்' என்றே அழைக்கப்பட்டு வந்தது. இதே போன்று இவ்வாலயக் கல் வெட்டும் தாதன் கல்வெட்டு என்றே அழைக்கப்படலாயிற்று.

''மேவு பூவுலகில் திரு மாலமைத்த வொழுங்கைப்பார்!
மேவு தாதன் பகுக்க மனத்திலுன்னி
அரியோன் பதத்தை அடிபணிந்து தெண்டனிட்டு
குருவின் கையில் குதித்தோர் சரித்திரத்தை
மடலில் வரைந்து மனத்தை ஒருப் படுத்திக்
கொடையில் சிறந்த குகனிடத்தில் செல்லவென்று
காவி உடுத்திக் கமண்டலமுங் கைப்பிடித்து
ஆவி அடக்கி அஞ்செழுத்தை உச்சரித்துப்
பல் லோர் புகழப் பாருலகோர் ஈடேற
வில் விசையன் செய்தவத்தை மேன்மை பெறக் காசினியில்
பத்ததி போற்காட்டிப் பகுத்தறியத் தாதனுந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றம் மகிழத் துதித்தெழுந்து தென்னிலங்கை
சென்று மட்டுமாநகரில் திருக்கோயில்
சந்நிதியைக் கண்டு நமஸ்கரித்துக் கைகூப்பி நிற்கையிலே
கலிங்க குலத்துக் காவலனுமப் பொழுது
இலங்கு திருப்பணிக்கு இடு பூசை காணையிலே
பரத நாட்டிற் பிறந்தான் எனவறிந்து பார்வேந்தன்
இரத நடவீதி யென்னும் இடம் வரவழைத்து
எதிர் மன்ன சிங்கமென்னும் நரபதியும்
கதிதங்கும் இப்பதியில் கண்டதில்லை உந்தனைத்தான்
ஆர நீரறையும் ... ... ... ... ... சுந்தரஞ்சேர்
பேரேது ஊரேது பெருமையுட னேது மென்னத்
தாதன் மனமகிழ்ந்து தாரளந்த மாயவன்றன்
பாதம் பணிந்து பரிவுடனே ஓதுகின்றான்
கோங்கு நகர் மேவுங் கோவசியர் தன்குலத்தில்
பாங்குடனே நானுதித்துப் பாரதமென்றோர் மதத்தை
வங்கம் கலிங்கம் மலையாள புத்திபுரம்
அங்கங்கு சென்று அரியோன் அடியார்க்குக்
காட்டிய பின் தென்னிலங்கைக் கலிங்கர் குலத்தோர்க்கு
சூடநினைவு கொண்டு துளசி மாலையிட்டு
வந்தேனெனது மரபிதென்ன மன்னவனும்
சந்தோஷமாகித் தாதன்றனைத் தழுவி
வடவால் நிறைந்திருக்கும் வனமும் கடலருகும்
அடவாகத் தேடி ஆழி அருகாய் வரவே
கண்டார்கள் ஆல் வனத்தைக் கடலுமருகிருக்க
தொண்டார் தாதன் துதித்து நமஸ்கரித்துப்
பஞ்சாட்சரத்தைப் பதித்து மனத்தொன்றாக்கிக்
கஞ்சன் முதலாக ஐவர்விந்தஞ் சேர்ந்தமட்டும்
தீட்டி ஒளியாக்கிக் தீவளர்த்துப் பாய்ந்த பின்பு
காட்டி முறைப்படியே கலிங்க குலத்தோர்க்கு
வரிசை கொடுத்து மாலப் பதத்தைச் சேர்ந்த பின்பு
கரிசனையோ நம்பிசிறை கட்டுவதற்குச் சட்டமுடன்
தீர்த்து எதிர் மன்ன சிங்கன் மனம் மகிழ்ந்து
பார்த்தவர்கள் கொண்டாடப் பாரதத்திற் சொன்னபடி
கம்பம், வணவாசம், கடல்குளித்துத் தீப்பாய்தல்,
அம்புவில்லுத் தண்டுடனே ஐவர் கொலுவக்கி வைத்து
ஆடலொடு பாடி ஆதி துரோபதிக்கு
மாடமுயர் கோயில் வரிசையுடன் இயற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டார் தெண்டனிட்டார் குவலயத்தைக் காருமென்றார்
தம்பட்டம் சல்லாரி தாரைசின்னஞ் சங்குதொனி
உடுக்குச் சிலம்பு மணி ஒளிதங்குதீப மெழ
அடுக்கு முறையோ டரவான் களப்பலியும்
பத்ததி போற்காட்டிப் ''பணிக்கன் குலத்தோர்க்கு''
உற்றபுகழ் மேவ உங்களுக்கே முன்னீடு
ஈந்தேனிலங்கை எங்கு முயர்ந் தோங்க
ஆய்ந்து பணி செய்கென் றகல மன்னனப்பொழுது
பதினெண் வரிசை யொடு பத்தும் பதியுடனே
மதி வெண்ணொளி பரப்ப மாயோன் மதமோங்க
கண்டோர் களிகூரக் காசினியோர் கொண்டாட
என்றும் பாசிதமாயிப் பதியைப் பெற்றதினால்
ஆவினங்கள் வாழ அறமுயர்ந்து சாவி எழப்
பாவாணர் பாடப் பல்லுரெல்லாம் வாழ்க!
மாதத்தில் மூன்றுமழை மட்டுநகர் பெய்துவர
என்றார் பணிக்கர் குலத்ததிப னேந்தலிடம்
கண்டறிந்து மாயவன் கருணைதனை யுண்மை யென்று
''விமலதரு மனென்''னும் வேந்தனக மகிழ்ந்து
கமல விழிக் கண்ணன் கருணை தங்குமிப் பதிக்கு
வேண்டும் வயல் நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்
தூண்டு திகிழி தந்தம் சோதியெழ யீந்து மன்னன்
''கண்டி நகர்'' சென்றான் காசினியோர் தாமறியப்
பண்டு முற்ற என்றென்றூர் பார்,,

இதுதான் தூதன் கல்வெட்டு. இதனை மூடி மறைத்து வைப்பதினால் எம்மூர் மக்கள் இதனை அறியாதும் இதனால் பெறப்படும் பல உண்மைகளையும் அறிய முடியாமல் இருப்பதும் இயல்பே! இது பாண்டிருப்பில் வாழும் ஒவ்வொரு மகனிடமும் இருக்க வேண்டும் ஆகவேதான் இதனை இங்கு முழுமையாகத் தந்தோம். மேற்கூறிய வரலாற்றை இதில் கண்டு தெளிந்திருப்பீர்கள்.

இவ்வாலயம் எழும்பிய வரலாற்றுக் காலத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு இப்பாடலில் வரும் கண்டி மாநகரை ஆண்ட விமல தரு சூரியன் என்னும் மன்னன் இவ்வாலயத்தின் அருமை பெருமைகளை அறிந்து இவ்வாலயத்துக்கு வந்து பரவசமடைந்து, பல நிலபுலன்களும் பொன், வெள்ளி, தங்கம், தந்தம், இரத்தினம் போன்ற பொருட்களைக் காணிக்கையாய் ஈந்து சென்றனன் என்பதனால் அறியக்கிட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறது, கண்டி நகரை ஆண்ட விமலதர்ம சூரியனின் ஆட்சிக் காலம் கி. பி. 1594 முதல் கி பி. 1604ம் ஆண்டுவரை என்று பல ஆராய்ச்சி நூல்களால் அறியக் கிடக்கின்றது. ஆகவே இக் கோயில் இதற்கு முன்னர் எழுந்திருக்க வேண்டும் என்று துணிய இடமுண்டு. இதிலிருந்து இக்கோயிலின் பழமையை அறியலாம்.

இதனை மேலும் நிருபிக்கும் பொருட்டு எதிர்மன்னசிங்க மன்னவனின் ஆட்சிக் காலத்தை ஆராய்ந்த உண்மை புலப்படும். எதிர்மன்னசிங்கனின் வரலாறு கூறும் பாடலில் அவன் முடிசூட்டிய பாடலில் பின்வருமாறு காணப்படுகின்றது.

*"கார் தொலேப்பானென யிலங்கைக் -*
*கனகமுடி மன்னரெல்லாங் களித்து வாழ்ந்தக்*
*சீரி லங்கும் மட்டமெனுங் களப்பு நாட்டைச் -*
*சிறந்த கலிபிறந்து நாலாயிரத்தறு நூற்று நாற்பதாண்டில்*
*பார் செழிக்க முடிபுனைந்தான் தோப்பாவைப் -*
*பண்டதாக்கி பருதிகுலன் பவனியாய*
*தேரினிடம் வலந்திரிந்து செங்கோலோச்சு*
*மதிப்பவரசர் மரபனென்னும் எதிர்மன்ன சிங்கன்தானே!"*

என்பது அப்பாடல் இதில் கலி பிறந்து 4640ம் ஆண்டில் மன்னன் எதிர்மன்னசிங்கன் முடிசூட்டி ஆட்சிபீடம் ஏறினுன் என்றும். மேலும் அவனது சரித்திரம் மூலம் நாற்பத்தி நாலு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்றும் அறியக் கிடக்கின்றது.

இதனை உற்று நோக்குமிடத்து இக்காலப் பகுதிலேயே இவ்வாலயம் இம்மன்னனல் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று துணியலாம். இது கி. பி. 1539 ஆண்டுக்கும் கி. பி. 1583ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியாகும். ஆகவே இவ்வாலயம் தோன்றிய காலத்தை இதிலிருந்து நிர்ணயித்து இதன் பழமையை அறிந்து கொள்ளலாம்.

எதிர்மன்னசிங்கனின் கடைசிக் காலமான 1570 - 80 களில் இது கட்டப்பட்டிருக்கலாம் என்று எண்ணினுலும். விமல தரும சூரிய மன்னன் வந்து தரிசித்த அவனது ஆட்சிக்காலத்தை (கி. பி. 15904 - 1604) நோக்குமிடத்து கிட்டத்தட்ட ஒத்திருத்தலைக் காணலாம். ஆகவே விமல தரும சூரியன் காலத்துக்கு முன்பே கட்டப்பட்டது என்று நாம் துணியலாம். இது தெட்டத்தெளிவாகவே இவ் வரலாற்றில் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடு

வழிபாட்டு முறை இதில் சொன்னபடி அன்று தொட்டு இன்றுவரை நடைபெற்று வருகின்ற பெருமையைக் காணலாம். ஐவர் முதல் துரோபதி, கண்ண பரமாத்மாவுடன் இன்னும் பலரும் கொலுவிருக்க இன்றும் பூசை ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு வருவோர், கல்யாணக்கால் வெட்டுதல், வனவாசம் செல்லுதல், பார்த்தன் பாசுபதம் பெற தவ நிலைக்குச் செல்லல், அரவானை களப்பலி கொடுத்தல், கடல் குளித்துத் தீப்பாய்தல் என்பன எல்லாம் நியமம் தவறாது நடைபெறுவதைக் காணலாம்.

மகாபாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடந்ததைக் குறிக்கும் முகமாக இவ்வாலயத்தின் பூசை ஆராதனைகள் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 18 நாட்களுக்கு நடைபெறும். இந்த வழிபாட்டுக் காலத்தில் மகாபாரதக் கதை முழுவதும் படித்துப் பயன் சொல்வது பாரம்பரிய வழக்கப்படி இன்றும் இங்கு நடந்து வருவதைக் காணலாம்.

வழிபாட்டில் இப்போது காலத்துக்கேற்ற வகையில் 'பலி கொடுத்தல்' நிறுத்தப்பட்டுள்ளது. நாம் இன்னும் காணும் ஒரு குறை என்னவெனில் கல்வெட்டில் குறிப்பிட்டபடி

''தம்பட்டம் சல்லாரி தாரை சின்னஞ் சங்குதொனி
உடுக்குச் சிலம்பு மணி ஒளிதங்குதீப மெழ''

பூசை ஆராதனை நடைபெற்றதைக் காணலாம். இன்று இவை எல்லாம் இருக்க உடுக்கையின் நாதம் இன்று எழுவதைக் காணோம். கோயிலைச் சுற்றி வருங்கால் பாடலுடன் இதனை முன்னர் அடித்து வருவதுண்டு இந்த வழக்கு மாறக் காரணம் யாதென நாம் அறியோம். இது மீண்டும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

# பரிபாலனம்

தாதன் கல்வெட்டுப் படி இவ்வாலயத்தின் பரிபாலனம் ''பணிக்கர் குல'' மென்னும் ''பணிக்கன் குடி'' என்று இன்றும் வழங்கிவரும் முற்குகர் வகுப்பிலே அடங்கிய குடிகளில் ஒன்றிடமே கையளிக்கப்பட்டதைக் காண்கின்றோம்.

இவ்வாறான குடிப் பிரிவுகள் பண்டு தொட்டு நிலவி வந்த போதும் இவை ஆலய பரிபாலனத்துக்காக ஏற்பட்டனவே அன்றி நம்மிடையே சாதிசமய உட் பூசலை ஏற்றுவிக்க வல்ல என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் இவ்வாலயத்தின் பரிபாலனம் பணிக்கனு குடித் தலைமையில் இருப்பதும் இக் குடியே பெரும் குடியாக இருப்பதனல் இக்குடிக்கு ஆலய பரிபாலனத்தில் முக்கியத்துவம் கொடுக்கப் படுவதும் கூடிய ''முகாமைக்காரர்கள்'' இருப்பதும் இரண்டு பூசைகள் இருப்பதும், அவர்களது 'கல்யாணக் கால்' வெட்டுதல் என்னும் சிறப்பான பூசையுடனே கோயில் களை கட்டத் தொடங்கி கொண்டாட்டம் விமர்சை அடைவதும் இன்றும் காணக்கூடியது.

கோயிற் பூசைகளுக்கென பின்வரும் குடிகள் வகுக்கப் பட்டுள்ளன, இக் குடிகளின் முகாமைக்காரர்கள் பூசைகளை குடி மக்களிடம் இருந்து பணம் அற விட்டுச் செய்யவும் நிர்வாக சபையின் சாதாரண அங்கத்தவராயும் இருக்கக் காணலாம். இக் குடிகளுடன் பின்வரும் சாகியங்களும் சேர்க்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பான பூசைகள் ஒதுக்கப்பட்டிருத்தலையும் காணலாம்.

குடிகள் சாகியங்களின் விபரம் வருமாறு:

1. வீரச் சோலை வேளாளர் குடி
2. பெத்தான் குடி
3. பணிக்கொணு குடி
4. வெள்ளரசர் குடி
5. மூங்கில்சோலை வேளாளர் குடி
6. சுருவிளி குடி (வேளாளர்)
7. படையாண்ட குடி
8. மழுவரசன் குடி
9. சின்னமுடவன் குடி
10. சங்கரப் பத்தான் குடி
11. மொட்டைச் செட்டி வேளாளர் குடி
12. நாவிதர் சமூகம் - சோடனை
13. சாண்டார் சமூகம் - வனவாசம்
14. வண்ணார் சமூகம்
15. தட்டார் சமூகம் - (தவநிலையும் தீப்பாய்தலும் (விஸ்வப் பிரம்ப குலம்)

இதை விட வேறு பல கோயில்களின் இன்னும் பல குடிகள் வழங்கி வருவதைக் காணலாம். இக்குடிகள் ஆலயம் அதனைச் சூழவிருந்த மக்களைக் கொண்டே வகுக்கப்பட்டதென் பதே இதிலிருந்து புலனாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் பரிபாலனம் இன்று சிறப்பான முறையில் நடைபெற்ற பொழுதிலும் இதில் ஏற்பட்ட பிணக்குகளையும் இன்னும் மக்களுக்கிருக்கும் குறையையும் இங்கு எடுத்துக் காட்டாவிடில் இது நிறைவு பெற்றதாகாது.

இவ்வாலய பரிபாலனத்துக்கு எதிராக 1929ம் ஆண்டு ஒரு வழக்குத் தொடரப்பட்டு அதற்குத் தீர்ப்பு 1931ம் ஆண்டு வைகாசி 26ல் வழங்கப்பட்டுள்ளது. டிஸ்திறிக் கோட் வழக்கு இல, 6978 ஆகும்.

''இத் தீர்ப்பில், வழக்காளிகள் எதிரிகளின் நேர்மையீனத்தை அல்லது தவறான பரிபரிபாலனத்தை ருசுப்படுத்தவில்லை என்பது எனது கொள்கை'' என்று கூறிய நீதிபதியவர்கள் பின்வருமாறு கூறியிருப்பதையும் காணலாம். ''ஊரெங்கும் நின்றுலாவும் சுயாட்சிப் பேச்சில் இவர்களும் பிடித்துவிட்டனர். தங்கள் பணத்தைத் தாங்களே கையாளவும், தங்கள் கருமத்தைத் தாங்களே நடத்தவும் எண்ணுகின்றனர்''

1929 – 31ம் ஆண்டிலே இவ்வாறான நோக்கம் குடிகொண்டதெனில் பின்னர் எவ்வாறு இருந்திருக்கும் என்று விளக்கவேண்டியதில்லை. பின்னர் 1975 - 78ம் ஆண்டுகளில் ''ஸ்ரீ துரௌபதை அம்மன் புனருத்தாரண சபை'' ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதுவும் ஆலய பரிபாலனம் ஊர் மக்களின் கைகளுக்கு வரவேண்டும் என்று வாதாடினர். முடிவு ஈடேறவில்லை என்றே கூறவேண்டும்.

அன்று ஊரில் சனங்கள் இல்லாததாலும் - நற்பிட்டிமுனை என்னும் கிராமமே மக்கள் வாழும் கிராமமாக இருந்தபடியாலும் பணிக்கஞர் குடியில் படித்த நீர்ப்பாசன உத்தியோகம் பார்த்தவர்களும் வன்னிமைகளும் அங்கேயே இருந்ததினல் இவ்வாலய பரிபாலனம் அவர்களிடம் இருந்தது. இப்போது அது உருத்து வழி அங்கேயே இருந்து வருகின்றது, கோயிலும் கோயிலில் பூசை செய்யும் முகாமைக்காரர்களும் இங்கேயே இருக்க கோயிலின் முக்கிய பதவிகளான தலைவர், உபதலைவர், செயலாளர் என்பன போன்றவை அங்கிருப்பதை, மக்கள் விரும்பாததின் விளைவே இது.

இவை கல்வெட்டின் படி பணிக்கஞர் குடிமக்களிடமே இப்போதும் இருந்து வரினும்; இப்போது பாண்டிருப்பிலும் அக் குடி மக்கள் நிறைந்து இருப்பதனால் இப் பதவிகள் தங்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் வந்து சேரவேண்டும் என்று அவர்கள் கேட்பது இயல்பே யாகும்.

இக் கோயில் பரிபாலனத்தின் தலைமைப் பதவிகளும் மற்றும் முகாமைப் பதவிகளும் (நிர்வாக சபை உறுப்பினர்) கூட தாய் வழியிலே தெரிவு செய்யப்பட்டு வருவதை இன்றும் காணலாம்.

"வேரோடி விழாத்திமுளைத்தாலும் தாய் வழி தப்பாது" என்பார்கள் இதற்கொப்ப குடிவழி தப்பாதிருக்கும் பொருட்டு தாய்வழி மூலம் இதனைத் தெரிவு செய்து வரும் வழக்கத்தைப் பண்டு தொட்டு கைக்கொண்டு வருகின்றனர், இதனால் பாரம்பரிய பழைய முறைகள் இன்றும் வழுவாமல் நிலைபெற்று நின்று வருகின்றன.

தாதனால் ஸ்தாபிக்கப்பட்டதினால் இக் கோயில் 'தாதன் கோயில்' என்று அழைக்கப்பட்டதைக் கண்டோம். பின்னர் இதுவே மகாபாரதத்தின் நாயகனை கிருஷ்ணனின் பேரால் 'கிருஷ்ணன் கோயில்' என்றும் இடையில் அழைக்கப்பட்டது. ஈற்றில் துரௌபதியை நாயகியாகக் கொண்டு வழிபாடுகள் நடைபெற்று வந்ததினால் 'துரௌபதையம்மன் கோயில்' என்ற பெயர் நிலைபெற்று நின்றுலவி வருகின்றது.

அம்மனின் அருளாட்சி நடக்கும் இவ்வூர் பல இயற்கை அழிவுகளில் நின்றும் வன் செயல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு வருவதை உணர்ந்து இவ்வூர் மக்கள் அம்மனின் அருளைப் போற்றி மெய்சிலிர்த்து நிற்கின்றனர். துரௌபதையம்மனுடன் கண்ண பரமாத்மாவும் எழுந்தருளி இருப்பது இக் கோயிலின் இன்னுமோர் சிறப்பம்சமாகும். அதர்மத்தை அழிக்க அவதரித்த அப் பகவான் எம்மையும் அவற்றில் இருந்து காப்பாராக என்று வேண்டி நூலின் விரிவஞ்சி இதனை நிறைவு செய்கின்றேன்.

---

## இருவர் இதயம்

என்னை நன்ருய் இறைவன் படைத்தது
தன்னை நன்ருய்த் தமிழ் செய்யுமாறே! — திருமூலர்

கண்ணன் என்னைக் கவியாய்ச் சமைத்தது
வண்ணத் தமிழால் வாழ்த்திடுமாறே! — கவிஞர் கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலுபேருக்கு நன்றி!

நாலுபேருக்கு நன்றியென்று நமது முதாயர் கூறிச் சென்ற அந்த நாலுபேர்களும் யார்? நாம் இறந்தபின், எமது சவக் கூட்டைக் காடுவரைக்கும் சுமக்கும் கட்டையர் 'நால்வர்'. இவர்கள்தான் அந்த நால்வரின் நன்றிக்குரிய நல்லவர்கள் என்று நினைத்து, முண்டியடித்துக் கொண்டு முன்னுக்கு வந்து. அந்தக் காலில்லாக் கட்டிலைத் தம் தோளிலே சுமக்கின்றுர்கள். இவ்வாறு கட்டில்ச் சுமந்து காடு வரைக்கும் போகின்ற இவர்களில் நானுமொருவன் தான். இருந்தபோதிலும் அந்த நால்வரின் நற்பெருமைக்கும் நன்றிக்கும் உரியவன் நாளுகமுடியாது. அப்படியானல் அந்த நன்றிக்குரிய நால்வரும் யாராக இருக்க முடியும்? இதை இங்கே நான் கூறும் கதையைவைத்து நீங்களே தீர்மானியுங்கள்.

எமதூரில்: பெண்ணுக்குப் பெண்ணென்று பிறந்தப்போ, பெற்றவளின் ''சேலைக்குக் குற்றம்'' அந்தக் குற்றமதை நீக்கித் தூயமை பெறச் செய்வதற்காய் அங்கே வருமொருவன், அவன் - அப்பெண் குழவியவள் பெரியவளாய் வளர்ந்துயர்ந்து, ஒரு நாள் பூத்தப்போ அங்கேயும் ''சேலையிற் குற்றம்'' அதை நீக்கித் தூய்மை படுத்தவும் வரும் அவன் எம் வாழ்க்கையிலே நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் வருடாந்தம் என்று எம்மோடும், எம் குடும்பத்தோடும் ஒன்றித்து, உற்றநண்பனுய் உண்மையுள்ளவனுய் உழைத்துழைத்து, எம் தாய்வழி தொடக்கம், பிள்ளையின் வழி வரைக்கும் அவன் எமக்கு அன்புடையவனுக இருக்கின்றுன். நாமும் அவனைக் கழிக்கவில்லை. பிறப்புவிழாவா, வீடுத் திறப்பு விழாவா, பூப்புவிழாவா, புது மணம் முடிப்பு விழாவா, எதுவாக இருந்தாலும் அங்கெல்லாம் பெருமையுடன் அழைக்கப்படும் அவன் எமது இறுதி வரையில் வரும்...... மரணச் சடங்கிலும் வந்து கலந்து கொண்டு தன் பங்கைச் செவ்வனே செய்யும் அவனுக்கு, இன்று இங்கே இறந்துபோன இவன், இங்கே வாழ்ந்திருந்த காலம் வரையில் 'அவன்' ஆகிய இவனுக்குப் பெரிதாக என்னதான் செய்தான்? பொன்னை அள்ளிக் கொடுத்தானு இல்லை அன்பைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தானா? இல்லை! இவனின் உழைப்பை உணர்ந்து தன்நூரைக் கூட்டி இவனின் பெருமையைப் போற்றி மதிப்புச் சான்றிதழ்களேதும் வழங்கி இவனைக் கௌரபித்தானா? இப்படியாக எமது ஊழிவரைக்கும் எமக்குச் சேவை புரியும் இவனுக்கு எம் 'பாடையை'த் தன் தோழிலே சுமக்கும் பலங்கிடையாத என்ன?

இறந்து போனவனின் உடலைச் சுமந்துவரும் உங்களின் பாதங்களுக்கும் சுடலைவரைக்கும் வழிநெடுகே நிலப் பாடைச் (சேலை) விரித்து உங்களுக்கும் பாத பூஜைவேறு செய்கின்றான் இவன். இப்படியான இவனுக்கு அந்த ''நன்றி'' இங்கே சொல்லப்படவில்லையென்றால் அந்தப் பாடையைச் சுமக்கும் நால்வராகிய உங்களில் ஒருவன் அங்கிருந்து விலகிக் கொள்ளுங்கள், அந்த இடத்திற்கும் தோள் கொடுக்கத் தோழமையுடன் சுமக்கட்டும் இவன், அப்போதிலாவது அந்த நன்றியுள்ள நல்வாழ்த்திற்குரிய நால்வரில் ஒருவன் ஆகட்டும் இவன்.

இவனுக்கு அடுத்தாற்போல் அடுத்தொருவன். அவன்:- நீ அன்று பிறந்து சிலநாளில் உன் உச்சி மயிர்தன்னைக் களைய வந்தவன் என்பதையும் நீ மறந்துவிட்டாய்! உன்பிறப்புமுதல் இங்கே நீ வாழ்ந்து முடிக்கும் இறுதி நாள் வரைக்கும், உன்தலையிலே வளரும் பெருங் காடுகளை அரிந்தும், உன்முகத்திலே வளரும் புற்களை வளித்தும் உன் எண் சாண் உடம்பிற்குப் பிரதானமாக இருந்த உன் சிரசினை அன்போடும், அபிமானத்தோடும், உன்பணிப்பையேற்று அவ்வப்போது உனக்கு அரும்பெருந் தொண்டு புரிந்த தொண்டன் இவன். இன்று இங்கே நீயொரு அநாதையைப்போல் இறந்து கிடந்த போதிலும், இவன் வந்து உன் உடலினைத் தொட்டுத் தலைசீவி, முடிகளைந்தும் உனக்கும் உன் முகம் பூசி மயிர் வளித்தும், உன் உயிரற்ற கட்டைக்கும் இங்கே பெருமையை வழங்கிய இவனிருக்க, அங்கே 'கட்டில்' சுமக்கும் நால்வரில் ஒருவர் வந்தா உனக்கு இச் சேவை வழங்கினர் ''நீநன்றி'' சொல்வதற்கு. இங்கே நீ சிந்திக்க வேண்டும்..... அன்று நீ பிறந்தவிடத்து உன் தலைமயிரினைத் தொட்ட நாள்முதல் உன் குடும்பத்தார் அத்தனைபேருக்கும் சேவை புரிவதையே தன் தொழிலாகக் கொண்ட இவன் இறுதி வரைக்கும் உன் கூட வரும் இடத்தில்கூட உன் சிரசிக்கும், உனக்கும் சேர்த்துத் தன் இறுதி மரியாதையைச் செய்வதற்காக, இவன் உன்வாய்க்கும் (அரிசி) போடுங் கொண்டுவருகின்றான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்த அரிசியை அங்கே வந்திருக்கும் அனைவரின் கையிலும் பகுந்தளித்து "எல்லோரும் வாய்க்கரிசி போடுங்கள்" எனச் சொல்லித் தானும் உனக்கரிசி போட்டு உன்னை மூடிவிட்டு "மாண்ட உன் மண்டைக்கு மதிப்பொன்றும் வேண்டும்" எனச் சொல்லி அவன், உன் மதிப்புக்குரிய மகனின் தலையிற் தண்ணீர் முட்டியொன்றையும் வைத்து உன் புதையலைப் புதலவன் மூம்முறை சுற்றிவருகிற இடத்தில், அம் முட்டியின் அடியில 'மூன்று தத்துவம் (பிறப்பு, வாழ்வு, இறப்பு) கூறக் கத்தியால் கொத்தி "முடிந்தது உனக்கு என்பணி" என்று விளங்கிடும் இந்த அன்புப் பணியாளன் இவனுக்கு இங்கே அந் நன்றி சொல்லப்படவில்லை யென்றால் - அங்கே பாடை சுமக்கும் நால்வரில் ஒருவர் பாடையிலிருந்து உங்கள் தோளினை விலக்குங்கள். அந்த இடத்தில்க்கூட இந்தத் தோழன் சுமக்க வருகிறேன் என்கிறான், அப்போதிலாவது இவன் நன்றிக்குரியவனாக ஆகட்டும்.

இதுவரைக்குமிங்கே இருவரைப் பற்றிச் சொன்னோம். உண்மையை உணர்ந்து இருவர் "அந் நன்றிக்குரியவர் நாங்களே அல்லர்" என்று சொல்லிய வண்ணம் நன்றியை விட்டு நகர்ந்து கொள்கின்றனர், இதனைக் கண்டு இன்னும் இருவர் "அடுத்த இருவரும் யாராக இருக்கும்?" என்று ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவசரப்படாதீர்கள், அடுத்த இருவரையும் இங்கே அழைத்து வருகின்றேன்.

## மூன்றும் இவன் -

அன்றிருந்து இன்றுவரை உனக்கும் உன் சமூகத்திற்கும் அழப்பெரிய தொண்டு புரிபவனாக இருக்கின்றான் இவன். செய்யும் தொழிலே தெய்வம் என்கின்ற வாக்கியம் இவனின் தொழிலை மேன்மை படுத்திக் காட்டுகின்றது இங்கே நீ வாழ்ந்திருந்த காலங்களில், நீ சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வசிப்பதற்கு இவன் உற்ற பணி ஆற்றி நிற்கின்றான். பரந்த மனமும், சிறந்த குணமும் உள்ள இவன், உன் முன் பரந்து கிடக்கின்ற பாதையோரங்களில் அடைந்து கிடக்கின்ற அழுக்கையெல்லாம் - தன் கையால் அள்ளிச் சுமக்கின்றான், எங்கெங்கு நீ அசுத்தப்படுத்தி வைக்கின்றாயோ, அங்கெல்லாம் இவன் சென்று அவற்றை அப்புறப்படுத்துகின்றான். இவன் இல்லை என்றால் உன் சமூகமே நாற்றம் எடுத்திருக்கும், உன் வீட்டுச் சுற்றாடலினைச் சுத்தம் செய்ய வரும் இவனை நீ "ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்'' என்று வெறுப்பாக அழைத்தபோது ''எண்ணுங்க சாமி'' எனும் இவனின் பணிவான பேச்சு, இத்தனை அடக்கமுடைய இவன் - ஒருக்கால் நீ யாருமற்ற ஒரு அநாதையா, உலகுக்கு வெளியே, ஆலமரத்தடியிலோ இல்லை அரசின் மருத்துவ மனையிலோ...... உன் இறுதி நேரத்தில் கலகலவென்று மலசலத்தோடு நீ கண்ணைமூடி இறந்து கிடக்கின்றாய் கேள்விப்பட்டு அங்கே பறந்து வரும் இவன், உன்னைத் தொட்டுத் தூக்கிச் சென்று உன் உடலைத் தொட்டுச் சுத்தம் செய்து, உனக்கு உறவினர் இருந்தால் அவரிடம் உன்னை ஒப்படைக்கின்றான், இல்லை நீ அநாதைதான் என்றால், அரசினர் பணிப்பின் பொருட்டு உனக்குக் 'குழி'யது வெட்டி - அதிலே உன்னை அடக்கமும் செய்கிறான், இவனுக்கு நீ என்னப்பா அள்ளிக்கொடுத்து விட்டுச் சென்றாய்? இவன் உனக்குச் சேவை செய்தானே! இல்லையோ! ஆனலிங்கே இவன் உனக்கும் உன்சமூகத்திற்கும் சேவையே ஆற்றி நிற்கும் மூன்றுமவன். இங்கே நீ வாழ்ந்த காலத்தில் ஒருநாள் ஒருபொழுதிலாவது, உன்னை அறியாமலே உனக்கிவன் சேவை ஆற்றி நிற்பவன். நீ இங்கு வந்து தங்கியிருந்து. விடைபெற்றுச் செல்லு... த்து -

உனக்கு அன்புப் பணிபுரிந்த நால்வருக்கும் நீ கூறும் அந்த நன்றிக்குரியவர்களில் இவனும் ஒருவன்தான் என்பதை அன்பாளர் எவரும் மறுத்திடாரிங்கே! பாடை சுமப்பவரே, பகுத்தறிவாளர்களே! அந்த நன்றிக்குரியவர் நீங்களா? இனி நான்காமவனைப் பார்ப்போம் - இவன் ஆதிகாலத்தின் அரசனின் அரன்மனையிலே முக்கிய பதவியை வசித்தவன். அதாவது அரசனின் கட்டளைகளை அவ்வப்போது நாட்டு மக்களுக்கு அறியத்தர ''டங்குடக்கிடு டகுடடக்கி'' போட்டு மக்களை அழைத்து அரசனின் கட்டளைகளை அறியத் தருபவனும் அதே வேளை, அந்நாட்டுத் திருவிழாக் காலங்களில், திருமண வீடுகளிலும், தெய்வ ஸ்தலங்களிலும் 'கிடுகிடு டண்டாண் கிடுகிடு டண்டான்' என்றும் ''தகிடத்திண்டாங் கிடுக்கடக்கடி'' என்றும் தன் கைவந்த அக்கலையான அந்த மேளவாத்தியத்தை இலாவகமாக இசைத்து எம்மை எம்மூரை, எமதாலயங்களைச் சிறக்கச் செய்து வரும் எம்தோழன் இவன் எம்மீது இவனுக்கு அளவற்ற அன்பும் மதிப்பும் உண்டு ஒரு நாட்டிற்கு மன்னன் ஆற்றுந் தொண்டிலும் பார்க்க - இவன் தொண்டு ஒருபடி உயர்வும் பெறலாம். ஊரில் ஒருவர் இறந்துபோனல் அங்கே இவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து தன் சோகம் முழுவதை யும் ஒருங்கே குவித்துத் தன் மேளத்தில் அதையொரு சோக தாளமாக்கிப் போடுகின்றான். அதுமட்டுமா, இறந்தவனின் வீட் டிற்கு உறவினர்கள் ஒவ்வொரு வராக வரும்போது அந்த ஒவ் வொருவரையும் அங்கே கட்டி அழுவது இவனின் மேளத்தின் அழுகை அலரல்கள்தான். இது மட்டுமா, இறந்த அவனைச் சுடலைவரை கொண்டு சென்று, தீமூட்டிவிட்டு இறந்தவரின் உற வினர்கள் யாவரும் ஊர்திருப் பிப் போவார், ஆனால் இவன் மட்டும் அவனை விட்டுப்போ கான். இறந்தவனின் உடலிங்கு எரிந்து சாம்பலாகும்வரை வில கான். இடுகாட்டில் உடல் கூட் டைச் சுடுகின்ற இவனுக்கு நிக ரானவர் யார்; 'தீ விறகு சரிந்து விழ வேகாத கூடு, அரைகுறை யாய்க் கிடந்து விடலாகாதே என்று, எரியும்வரை விறகூட் டித் தீயருகே - ஒரு பேய்போலே, நன்றியுள்ள......... இவனுக்கு, நீ இறுதியிலே கூறும் அச்சிறு நன் றியாவது இவனுக்குச் சேரவேண் டாமா? ''இப்படியான கிரியை கள் இக்காலத்தில் இல்லையே?'' என்றும் சிலர் கேட்கலாம். இத னால் அந் நன்றியை இவனுக்கு வழங்கவும் மறுக்கலாம், அப்படி யென்றால் இந்த நாலுபேருக் கும் கூறப்படும் அந் நன்றியைப் பற்றிய ஆராய்ச்சி எமக்குத் தேவையற்றதொன்றாகி விடும். காரணம் இந் நன்றி கூறலும் இன்று நேற்றுச் சொல்லப்பட்ட தல்ல, இது என்றோ......? 'கூறி' வைக்கப்பட்ட ஒரு நன்றிவாக்கு, இப்படிச் 'சொல்' வாக்கிய மான இவ் வாக்கியத்தை, சங்க காலத்தில் வாழ்ந்த (காப்பியர் கள்) தமக்கே சாதகமாக்கிச் சாசனம் எழுதி வைத்துள்ளார் கள் போலும்? இதற்கு மேல் இதற்கிங்கு விரிவிலக்கணங்கள் அவசியமில்லை எனலாம். மேலே நாம் விரல்விட்டுக் காட்டிய அவர்களை விட பாடை சுமக் கும் நால்வர் எந்த வகையில் நன்றிக்குரியவர்கள்? இங்கே உட லைச் சுமக்க ஆளின்றி, ஊரில் எந்த வீட்டில் எந்தப் பிணம் கிடந்து அழுகி இருக்கின்றது? முந்தநாள் உன் பாட்டனை என் தந்தை சுமந்தார், நேற்று உன் தந்தையை நான் சுமந்தேன், இன்று என்னைச் சுமக்கின்றாய் நீ! நாளை உன்னைச் சுமக்க என் பிள்ளை இருக்கிறான் இங்கே. இத னலிங்கே அந்த நன்றி அந் நால்வருக்கேதான் சொந்தம்! எனவே இனிமேல் நாம் சொல்ல வேண்டியது "அந்த நாலு பேருக்கும் நன்றி" என்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சாயிசாகரம் இரா - சிவ அன்பு"

பாண்டிருப்பு இந்துப் பொதுமக்கள் சார்பில் இந்துமத பேரவையினர் **டாக்டர் இரா - சிவஅன்பு** அவர்களின் சைவத் தொண்டின் சிறப்பியலிலும், இன மத வேறுபாடின்றி சைவர்க்கே உரிய மரபு நெறிவழியிலே வைத்திய சேவை புரிவதிலும், சிறப்பியல் பெற்றமையை மகிழ்ந்து டாக்டர் இரா - சிவஅன்பு அவர்கட்கு 15-08-85 அன்று பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருவிழா இறுதி நாளன்று இடம்பெற்ற அன்னாரின் கதாப்பிரசங்க நிகழ்ச்சியின்போது **"சாயிசாகரம்"** என்னும் பட்டத்தை வழங்கி அன்னாரை வாழ்த்தி, பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிய வரலாற்றுப் பெருமை கொண்ட நிகழ்ச்சி இறைவனருளால் நடைபெற்றது. வாழ்க சாயிசாகரம் **சிவ - அன்பு!** தொடர்க அவர் தம் பணி இனிது என இந்து மதியினர் வாழ்த்துகின்றனர்,

---

# திருநீறு, திருமண் இடுவது ஏன்?

இந்துக்கள் திருநீறு அணிகின்றும் வைணவர்கள் திருமண் இட்டுக் கொள்வார்கள்; என்பது பிரிந்து இருந்த போதிலும் இரண்டும் இருவர்க்கும் இப்போது பொதுவானது அணிவதில் தான் வித்தியாசம். கல்யாணமாகாதவர்கள் இறந்து போனல் மண்ணில் புதைக்க வேண்டும். என்பது விதி. ஆனல் கல்யான மானவர்கள் இறந்து போனல் எரிக்க வேண்டும்மென்பது விதி புதைத்த உடம்பு மண்ணோடு மண்ணாகக் கலந்து விடுகிறது. எரித்த உடம்பு நீருக சாம்பலாகப் போய் விடுகிறது

இந்த உடம்பு ஒன்று நீருகலாம் அல்லது மண்ணுகலாம் இதை உணர்த்தத்தான் நெற்றியிலே திருநீறே, திருமண்ணே இடும் வழக்கம்.

**விளக்கம் செல்வி, சாந்தி வடிவேல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org